# 12 ஆம் வகுப்பு
# வரலாறு தொகுதி - 1

## பாடம் - 1 :

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

**1. காந்தியடிகள் தென்னாப்பிரிக்கவில் இருந்து எந்த ஆண்டு இந்தியா திரும்பினார் ?**

அ) 1915 ஆ) 1916 இ) 1917 ஈ) 1918

**2. இந்தியாவில் ஆங்கிலக் கல்வி எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது ?**

அ) 1825 ஆ) 1835 இ) 1845 ஈ) 1855

**3. மாறுபட்ட ஒன்றைத் தேர்க.**

அ) வில்லியம் ஜோன்ஸ் ஆ) சார்லஸ் வில்கின்ஸ்
இ) மாக்ஸ் முல்லர் ஈ) அரவிந்த கோஷ்

**4. "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்" - எனக் கூறியவர்.**

அ) பாலகங்காதர திலகர் ஆ) தாதாபாய் நௌரோஜி
இ) சுபாஷ்சந்திர போஸ் ஈ) பாரதியார்

**5. பின்வருவனவற்றை பொருத்தி சரியான விடையைத் தேர்க.**

| | | |
| --- | --- | --- |
| (அ) பாலகங்காதர திலகர் | - | 1. இந்தியாவின் குரல் |
| (ஆ) தாதாபாய் நௌரோஜி | - | 2. மெட்ராஸ் டைம்ஸ் |
| (இ) மெக்காலே | - | 3. கேசரி |
| (ஈ) வில்லியம் டிக்பை | - | 4. இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள் |

அ) 2, 4, 1, 3 ஆ) 3, 1, 4, 2 இ) 1, 3, 2, 4 ஈ) 4, 2, 3, 1

**6. பின்வரும் எது ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது ?**

அ) ஆங்கிலக் கல்விச் சட்டம் - 1843
ஆ) அடிமைமுறை ஒழிப்பு - 1859
இ) சென்னைவாசிகள் சங்கம் - 1852
ஈ) இண்டிகோ கலகம் - 1835

**7. பின்வரும் அமைப்புகள் தொடங்கப்பட்ட சரியான காலவரிசையைத் தேர்க.**

(i) கிழக்கிந்தியக் கழகம் (ii) மெட்ராஸ் மகாஜன சங்கம்
(iii) சென்னைவாசிகள் சங்கம் (iv) இந்தியச் சங்கம்

அ) ii, i, iii, iv (ஆ) ii, iii, i, iv இ) iii, iv, i, ii (ஈ) iii, iv, ii, i

**8. இந்திய தேசியக் காங்கிரஸை நிறுவியவர்.**

அ) சுபாஷ் சந்திர போஸ் ஆ) காந்தியடிகள்
இ) ஏ.ஓ. ஹியூம் ஈ) பாலகங்காதர திலகர்

**9. இந்தியத் தேசியக் காங்கிரஸின் முதல் தலைவர்.**

அ) சுரேந்திரநாத் பானர்ஜி ஆ) பத்ருதீன் தியாப்ஜி
இ) ஏ. ஓ. ஹியூம் ஈ) W. C. பானர்ஜி

**10. "இந்தியாவின் முதுபெரும் மனிதர்" என அழைக்கப்படுபவர்.**

அ) பாலகங்காதர திலகர் ஆ) எம். கே. காந்தி

இ) தாதாபாய் நௌரோஜி ஈ) சுபாஷ் சந்திர போஸ்

**11. "வறுமையும் பிரிட்டனுக்கொவ்வாத இந்திய ஆட்சியும்" என்ற நூலை எழுதியவர்.**

அ) பாலகங்காதர திலகர் ஆ) கோபால கிருஷ்ண கோகலே

இ) தாதாபாய் நௌரோஜி ஈ) எம். ஜி. ரானடே

**12. கூற்று : ஆங்கில அரசாங்கம் தடையற்ற வாணிகம் (அ) தலையிடாக் கொள்கையைப் பின்பற்றியது.**

**காரணம் (கா) : இங்கிலாந்தின் தடையற்ற வாணிபக் கொள்கையினால் இந்தியா ஈடான நன்மையைப் பெற்றது.**

அ) கூற்று சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

ஆ) கூற்று சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

இ) கூற்று சரி காரணம் தவறு.

ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு.

**13. ஒரிஷா பஞ்சம் குறித்த பின்வரும் கூற்றுக்களில் சரியானவை எவை / எது ?**

**கூற்று 1 : 1866 ம் ஆண்டில் 15 இலட்சம் மக்கள் ஒரிஷாவில் பட்டினியால் இறந்தனர்.**

**கூற்று 2 : பஞ்ச காலத்தில் 200 மில்லியன் பவுண்ட் அரிசியை பிரிட்டனுக்கு ஆங்கில அரசு ஏற்றுமதி செய்தது.**

**கூற்று 3 : ஒரிஷா பஞ்சமானது தாதாபாய் நௌரோஜியை இந்திய வறுமை குறித்து வாழ்நாள் ஆய்வை மேற்கொள்ளத் தூண்டியது.**

அ) 1, 2 ஆ) 1, 3 இ) இவற்றுள் எதுவுமில்லை ஈ) இவை அனைத்தும்

**14. கூற்று (கூ) : தாதாபாய் நௌரோஜி இந்தியத் தேசியக் காங்கிரஸின் தலைவராக மூன்று முறை தேர்வு செய்யப்பட்டார்.**

**காரணம் (கா) : 1905 ஆம் ஆண்டு வரையில் இந்திய விடுதலை இயக்கம் அரசியலமைப்பு -வாதிகளின் ஆதிக்கத்தில் இருந்தது.**

அ) கூற்று காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

**வினா எண். 7**

| | | | |
|---|---|---|---|
| (i) கிழக்கிந்தியக் கழகம் | 1866 | (ii) மெட்ராஸ் மகாஜன சங்கம் | 1884 |
| (iii) சென்னைவாசிகள் சங்கம் | 1852 | (iv) இந்தியச் சங்கம் | 1865 |